Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

**SESSIONS CASE NO.89/2022**

Deposition of PW2 Witness for Defence

Defence Court

Name :Ravi Caste:

Father's Name :Varathan Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 25th July 2023.

**( A1 to A3 present )**

**முதல் விசாரணை-**

நான் சென்னை பூந்தமல்லியை அடுத்த புதுசத்திரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன அசோக்குமார் எனது மகன். எனக்கு மூன்று மகன்கள். மற்ற இரண்டு மகன்களின் பெயர் கார்த்திக் மற்றும் நவீன். எனது மனைவியின் பெயர் தனபாக்கியம். 12/12/2020 அன்று இரவு 08.30 மணியளவில், நான், எனது மனைவி மற்றும் எனது மூன்று மகன்களும் வீட்டிலிருந்த போது ராஜாவின் மகன் சதீஷ் எனது வீட்டிற்கு வந்த எனது மகன் அசோக் குமாரை அழைத்து சென்றார். சதீஷ் என்பவர் எனது உறவினரின் பெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டார். அந்த பெண் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார். அது சம்மந்தமாக குற்ற வழக்கு, சதீஷின் பெற்றோர்கள் மீது, பதிவு ெ சய்யப்பட்டது. அந்த வழக்கில் சதீஷின் பெற்றோர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதன் பின்னர் சதீஷ் குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. 12/12/2020 அன்று இரவு 09.00 மணிக்கு மேல் மதகன் மகன் அசோக் குமார் என்பவர் எனது வீட்டிற்கு வந்து எங்களிடம், புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே எனது மகன் அசோக்குமார்

வெட்டு காயம் பட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதாக கூறினார். உடனே நான், எனது மனைவி , எனது மற்ற இரண்டு மகன்ளான கார்த்திக் மற்றும் நவீன் ஆகியோர் அங்கு சென்றோம். அங்கே பார்த்த போது எனது மகன் அசோக் குமாரின் இடது விலாக்கு கீழ் பகுதியில் கத்தி காயம் ஏற்பட்டிருந்தது. அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். உடனே நாங்கள் அவரை காரில் வைத்து திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்க எடுத்து சென்றோம். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக கூறினார். இது சம்மந்தமாக எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

(சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்புக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.பி.தயாளன் ஆஜராகி இருந்தும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படாததினால் சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது).